**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1**

**நீதிமன்றம், கொடைக்கானல், திண்டுக்கல் மாவட்டம்.**

**முன்னிலை : திரு. R. அருண்பாண்டியன், B.A.,B.L.,(Hons), M.L.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கொடைக்கானல், திண்டுக்கல் மாவட்டம்.**

2025 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 18 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**இடைக்கால மனு எண்.2/2024**

**in**

**அசல் வழக்கு எண்.68/2018**

1. பாலசுப்பிரமணியம் ... மனுதாரர் /வாதி

/ எதிர்/

1. அஜித் மத்தாய்
2. ஆணையாளர், கொடைக்கானல் நகராட்சி,
3. தாசில்தார், கொடைக்கானல்
4. மாவட்ட ஆட்சியர், ... எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இந்த இடைக்கால மனு என் முன் கடந்த 08.07.2025 தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் / வாதி தரப்பில் வழக்கறிஞர் திருமதி.பரிமளம், அவர்கள் ஆஜராகியும், 1–ம் எதிர்மனுதாரர் /பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.I.சாம்ஜெகன் அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரைகளைக் கேட்டறிந்தும், வழக்குரை மற்றும் சாட்சிய சான்றாவணங்களை பரிசீலனை செய்து இதுநாள் வரை என்னுடைய பரிசீலனையின் கீழ் இருந்து வந்த வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## உத்தரவு

1. மனுதாரர் / வாதி தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.68/2018ல் கடந்த 09.08.2023ம் தேதியன்று மனுதாரர் ஆஜராகாத காரணத்தினால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதை மீண்டும் கோப்பிற்கு எடுக்கக்கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 9 விதி 9ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுதாரர் / வாதி தரப்பு மனுவின் சுருக்கம்:–

அசல் வழக்கில் Trial தொடங்குவதற்காக வாய்தா போடப்பட்டிருந்த நிலையில், அன்றைய தினம் மனுதாரரால் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராக முடியாதக் காரணத்தால், மேற்படி அசல் வழக்கானது 09.08.2023ம் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும், தான் ஆஜராகாமல் போனது வேண்டுமென்ற ஏற்பட்டதல்ல என்றும், மேற்படி அசல் வழக்கை திரும்ப கோப்புக்கு எடுக்காவிட்டால் தனக்கு பெறுத்த நஷ்டம் எற்படும் என்றும், எனவே, அசல் வழக்கே மீண்டும் கோப்பிற்கு எடுக்கக்கோரி இம்மனுவானது தாக்கல் செய்துள்ளார்.

**3. 1–ம் எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பு எதிருரையின் சுருக்கம்:–**

மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு சட்டப்படிக்கும், பொருண்மைப்படிக்கும் நிலைக்கத்தக்கதல் என்றும், தான் அசல் வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்த பிறகு மனுதாரர் வழக்கை காலம் கடத்த வேண்டும் என்பதற்காக நீதிமன்றத்திற்கு விசாரணைக்கு வரமால் இருந்ததாகவும், அதனால் தான் வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், மேலும் மனுதாரர் தனது மனுவில் கூறியுள்ள காரணமானது ஏற்புடையதாக இல்லை என்றும், எனவே மனுதாரர் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று தாக்கல் செய்துள்ளார்.

4. 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் எதிருரை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும், இடைக்கால மனுவை அனுமதிக்கலாம் என்று ஒப்புதல் அளித்துள்ளனர்.

5. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**6. தீர்வு:–**

6.1 இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் அனைத்தும் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கில் மனுதாரர் எதிர்மனுதாரர்கள் மீது நிரந்தர தடைஉத்தரவு கோரி இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி அசல் வழக்கில் எதிர்மனுதாரர்கள் எதிர்வழக்குரையை தாக்கல் செய்துள்ளனர். மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் கடந்த 2018 ஆண்டு முதல் பிரச்சனை இருந்து வருவதாலும். அசல் வழக்கில் காலதாமத மனுவானது கடந்த 08.11.2024ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையிலும், இரண்டு தரப்பினர்களுக்கு இடையே உள்ள பிரச்சனையை இறுதியாக நீதியின் முறையில் தீர்மானிப்பதற்கு மனுதாரருக்கு வழக்கில் பங்கேற்க ஒரு வாய்ப்பளித்து உத்தரவிடுவது நீதியின் நலனுக்கு உகந்தது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

முடிவாக, மனுதாரர், 1–ம் எதிர்மனுதாரர்களுக்கு செலவுத் தொகையாக ரூ.500/– வரும் 19.08.2025ம் தேதியோ அல்லது அதற்கு முன்பாகவோ செலுத்த வேண்டுமெனவும், அவ்வாறு செலுத்த தவறும்பட்சத்தில் இம்மனு தானாகவே தள்ளுபடி செய்யப்படுவதாக கருதப்படும் எனவும் உத்தரவிடப்பட்டு, மேற்காண் பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது. வழக்கின் விசாரணை 19.08.2025 தேதி ஒத்தி வைக்கப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் அலுவலக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு பின்னர் இன்று 18.07.2025 நான் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2025.07.18 16:48:05 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1.

கொடைக்கானல்.

1. மனுதாரர் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை

2. எதிர்மனுதாரர் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை

3. நீதிமன்ற சான்றவாணங்கள்:– இல்லை

R ARUN PANDIAN Digitally signed by R ARUN PANDIAN
Date: 2025.07.18 16:48:11 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1.

கொடைக்கானல்.